පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය - 492

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - කෑගල්ල

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 492

மாவட்ட செயலகம், கேகாலை

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்களுக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்கள் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் படிமுறைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

***Parliamentary Series No – 492***

***District Secretariat, Kegalle***

***Submission of observations of the Hon Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No 119 (4)***

# பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 492

## மாவட்ட செயலகம் - கேகாலை

| குழுவினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள குறைபாடுகள் | குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயன்முறைகள் / நிகழ்கால நிலைமை |
|---|---|
| அனைத்து வாகனங்களிலும் அரச இலட்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை | உத்தியோகபூர்வ வாகணங்கள் தவிர்ந்த அனைத்து ஒதுக்கு வாகணங்களிலும் நிறம் பூசப்பட்டுள்ளது |
| நி.பி. 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட தற்காலிக துணை முற்பணம் பணி நிறைவடைந்து 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை | தேசிய விழாக்களை நடாத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள முற்பணங்களின் பட்டியல் மாகாண சபைக்கு அனுப்பப்பட்டு தீர்ப்பதற்கான காசோலைகளை பெற்றுக்கொள்ள வேண்டியமை மற்றும் ஏனைய நடைமுறை கஷடங்கள் காரணமாக இத் தாமதம் 2023 ஆம் ஆண்டு ஏற்பட்டுள்ளதுடன், குறைபாடுகளை அடையாளம் கண்டு, பிணக்குகளை சீர் செய்து, நிதிப் பிரமாணங்களுக்கு ஏற்ப இதுவரையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை | தேவைக் கேற்றவாறு 2023 ஆம் வருடத்தினுல் ஆறு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது. தற்போது வரையில் 03/2025 உள்நாட்டு அலுவல்கள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் காலாண்டிற்கு ஒன்று என்ற வகையில் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. |
| மாவட்ட செயலாளரினால் கூட்டப்படுகின்ற பிரதேச செயலாளர்களின் கூட்டம் மாதாந்தம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | தேவைக்கேற்றவாறு 2023 ஆம் வருடத்தினுல் நான்கு மாநாடுகள் நடாத்தப்பட்டிருந்தன. தற்போது மாதாந்தம் கூட்டம் நடாத்தப்படுகின்றன. |
| 1946 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளைகள் சட்டத்தின் பிரகாரம் மாதாந்த விவசாய நடவடிக்கைகள் தொடர்பான குழு நடாத்தப்பட்டிருக்கவில்லை | தேவைக்கேற்றவாறு 2023 ஆம் வருடத்தினுல் ஐந்து மாநாடுகள் நடாத்தப்பட்டிருந்தன. தற்போது தேவைக்கேற்றவாறு மாதாந்தம் கூட்டம் நடாத்தப்படுகின்றன. |
| மாவட்ட வீடமைப்புக் குழு மாதாந்தம் கூட்டப்பட்டிருக்கவில்லை | குழுக் கூட்டத்தை நடாத்துவதற்காக விஷேடமான விடயங்கள் இல்லாததனால் செலவுகளைக் குறைத்துக் கொள்வதற்காக 2023 ஆம் வருடத்தினுல் காலாண்டிற்கு ஒரு குழுக்கூட்டம் நடாத்தப்பட்டுள்ளன. |
| மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழு மாதாந்தம் நடாத்தப்பட்டிருக்கவில்லை | தேசிய உரச் செயலகத்தின் அறிவுருத்தல்களின் பிரகாரம் சிறு போகம் மற்றும் பெரும் போகம் தொடர்பாக இரண்டு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. தற்போது போகத்திற்கு ஏற்ப கூட்டங்கள் நடாத்தப்படுவதோடு விஷேட காரணங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் மேலதிக கூட்டங்கள் நடாத்தப்படும். |

| | |
|---|---|
| மாவட்ட விலை நிர்ணயக் குழு மாதாந்தம் கூட்டப்பட்டிருக்கவில்லை. | 2021.10.27 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2022 ஆம் வருடத்திலிருந்து ஒரு காலாண்டிற்கு ஒன்று என்றவாறு குழுக்கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது. |
| நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் கீழ் மட்டத்தில்/ நடுத்தரமான மட்டத்தில்/ பாதகமான மட்டத்தில் காணப்படுகின்றது. | 2024 மே மாதம் 12 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ள 2023 ஆம் வருடத்தின் நிதி நிலமைக் கூற்றிற்கான கணக்காய்வாளர் அதிபதி அறிக்கையின் பிரகாரம் கணக்கீட்டு • கொள்கைகளுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான நிலைமையொன்று பிரதிபலிக்கப்படுவதாக கருத்தொன்று வழங்கப்பட்டுள்ளது. |
| சிறுவர் உரிமைகள் தொடர்பான மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு காலாண்டிற்கு 01 வீதம் கூட்டப்பட்டிருக்கவில்லை | ஏற்றுக் கொள்ள முடியாது. மகளிர் மற்றும் சிறுவர் நடவடிக்கைகள் அமைச்சின் 01/2018 சுற்றறிக்கையின் பிரகாரம் வருடத்தினுல் ஒருகாலாண்டிற்கு ஒன்று வீதம் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. தற்போது . உரியவாறு கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. |
| திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளில் வழங்கப்பட்டிருந்த பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை 50% இனை விடக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது | திட்டமிடப்பட்டிருந்த பதிமூன்று பயிற்சி நிகழ்ச்சிகளில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு கிடைத்த கோரிக்கைகள் மற்றும் சமயத்திற்கேற்ற பயிற்சித் தேவைகளுக்கேற்றவாறு ஒன்பது பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருந்தன. தற்போதாகும்போது திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழச்சிகள் மிகச்சிறந்த மட்டத்தில் நடாத்தப்படுகின்றன. |
| மாவட்ட சுற்றுச் சூழல் குழு குறைந்த பட்சம் 02 மாதங்களுக்கு ஒரு தடவையேனும் கூட்டப்பட்டிருக்கவில்லை | ஐந்து தடவைகள் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் விஷேட விடயங்கள் இன்மையால் ஒரு கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. தற்போது உரியவாறு கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. |
| நிலையான அபிவிருத்தி மற்றும் வண சீவராசிகள் அமைச்சின் 2016.11.17 ஆம் திகதிய SDW/3/16 – 2016 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் அறிவுருத்தல்களின் பிரகாரம் காட்டு யானைகளின் சேதங்கள் மற்றும் ஏனைய வண சீவராசிகளின் மூலம் ஏற்படுகின்ற சேதங்கள் தொடர்பாக நட்டஈட்டுக் குழு கூட்டப்பட்டிருக்கவில்லை | இம்மாவட்டத்தில் காட்டு யானைகளின் சேதங்கள் தொடர்பாக சம்பவங்கள் அறிக்கைப்படுத்தப்படவில்லை மற்றும் ஏனைய விலங்குகளின் மூலம் ஏற்படுகின்ற சேதங்கள் தொடர்பாக நட்டஈடுகள் செழுத்தப்படாமையின் காரணமாக இவ்வாறான குழுவொன்று இதுவரையில் செயற்படுத்தப்படாமை. |

எஸ். என். ஜயசிங்ஹ
பிரதான கணக்காளர்
கேகாலை மாவட்ட செயலகம்

S. N. Jayasinghe
Chief Accountant
For District Secretary, Kegalle

கே.ஜீ.எஸ். நிஷாந்த
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்
கேகாலை நிர்வாக மாவட்டம்

K.G.S. Nishantha
District Secretary/ Government Agent
Kegalle Administrative District

**செயலாளரின் பரிந்துரை**

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

S. Alokabandara
Secretary
Ministry of Public Administration,
Provincial Councils and Local Government

**அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2026 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு (பேராசிரியர்) ஏ. எச். எம். எச். அபயரத்ன அவர்கள் (பா.உ)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Prof. A.H.M.H. Abayarathna
Minister of Public Administration, Provincial
Councils and Local Government
Independence Square, Colombo 07.